சென்னை–21, தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை. திருமதி. சா. சாந்தினி. எம்.எஸ்.ஸி., (விவ.,)

செயல்முறை ஆணை எண். அ /1634/2023 நாள். 31 .01.2024

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV –இல் அடங்கிய பணிகளுக்கான நேரடி நியமனத்தேர்வு 24.07.2022 – இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது)– பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்து பெறப்பட்டு பின்னர் தோட்டக்கலைத்துறைக்கு பணி நியமனம் வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்தது – பணி நியமனம் வழங்கி ஆணையிட்டது – பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை: 1. சென்னை–05, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். OPS5/92705/2023 நாள்:08.12.2023.

2. சென்னை–05, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி2/24910/2023. நாள்.14.12.2023.

********

ஆணை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV –இல் அடங்கிய பணிகளுக்கான நேரடி தேர்வின்(போட்டி தேர்வு நாள்.24.07.2022)–ன் மூலம் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவிக்கு தற்காலிகமாக தெரிந்தெடுக்கப்பட்டு பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் படி இவ்வலுவலகத்திற்கு பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் கீழ்க்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய பட்டியல் வரிசை எண். | பெயர் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்து கொண்ட விவரம். | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 01 | 31 | எ. கீதப்பிரியா | 21.12.2023 முற்பகல் | 21.12.2023 முற்பகல் |
| 02 | 48 | ல. சிவபூபாலன் | 21.12.2023 முற்பகல் | 21.12.2023 முற்பகல் |
| 03 | 58 | சோ. மைவிழி | 22.12.2023 முற்பகல் | 22.12.2023 முற்பகல் |
| 04 | 110 | கி. பௌசிகா | 22.12.2023 முற்பகல் | 22.12.2023 முற்பகல் |
| 05 | 81 | பெ. சுகந்த் | 22.12.2023 முற்பகல் | 22.12.2023 முற்பகல் |

(த.பி.பா…)

Scanned with OKEN Scanner

இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை/மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. (''This Regularization is subject to the outcome of WP's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Branch of the Hon'ble High Court of Madras relating to the Recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group-IV)''

மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர்கள் (பிணையமற்றது) பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். இரண்டாண்டு பணிகாலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சினை நிறைவு செய்து, இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் என தெரிவிக்கப்படுகிறது.

3/1/24

தோட்டக்கலை துணை இயக்குநர்
சென்னை - 21.

பெறுநர்.

1. செல்வி. எ.கீதப்பிரியா, இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.
2. திரு. ல. சிவபூபாலன், இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.
3. செல்வி. சோ. மைவிழி , இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.
4. செல்வி.கி.பௌசிகா, இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.
5. திரு.பெ.சுகந்த், இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.

29/1/2024

நகல். சென்னை – 05, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல். திருவள்ளூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல். பட்டியல் பிரிவு– இவ்வலுவலகம்

நகல். பணிப்பதிவேட்டிற்கு.

நகல். இருப்பு கோப்பிற்கு

Scanned with OKEN Scanner